1995 ஏப்ரல் 17]

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய இந்த மின் தடைகள் இல்லாமல் இருப்பதற்கு ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய்ச் செலவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தப் பகுதிகளில் மின் தடைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு மின்சார டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கின்றபோது ஆர்.எஸ்.புரம் பகுதியில் சுமார் 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரே சாலையாக உள்ளதால், அந்தப் பகுதியிலுள்ள டிரான்ஸ்பார்மர்களை மூன்றாகப் பிரித்து அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோவை மாநகராட்சியினுடைய கட்டுப்பாட்டிலே மின்வாரியத்தினுடைய மின் பகிர்மானம் இருந்து வந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் இன்றைக்கு அதை மின்வாரியத்தின் பொறுப்பிலே எடுத்துக்கொண்டு, மேம்பாட்டுப் பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறோம். இதுபோன்ற பணிகள் அரசினுடைய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னையிலிருந்து விமானம் மூலம் ஹஜ் பயணிகள் செல்வதற்கு இடைவெளியின்றி தேதிகளை மத்திய ஹஜ் கமிட்டி அறிவித்திருப்பதால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி. கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அரசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி. கே. மரியம் உல் ஆசியா.

* திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையிலிருந்து விமானம் மூலம் சுமார் 3,150 ஹஜ் பயணிகள் செல்வதற்கான தேதிகளை மாநில ஹஜ் கமிட்டியின் எதிர்பார்ப்புக்கு மாறாக மத்திய ஹஜ் கமிட்டி இடைவெளியின்றி அறிவித்திருப்பதால் ஹஜ் பயணம் செய்பவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

இவ்வருடம் சென்னை–ஜித்தா நேரடி விமானம் மூலம் 2,958 பேர்கள் மற்றும் 4 குழந்தைகள் புனித ஹஜ் பயணம் புறப்படவுள்ளனர். தமிழ்நாடு ஹஜ் குழு, இந்திய அரசு மற்றும் பம்பாய் ஹஜ் குழுவிடம் ஒவ்வொரு விமானத்திற்கும் இடையில், குறைந்தது ஒரு நாள் கால இடைவெளி இருக்கும்படி ஏற்பாடு செய்ய கேட்டுக் கொண்டது. ஆனால், பம்பாய் ஹஜ் குழுவிடமிருந்து பெறப்பட்ட விமானப் பயண அட்டவணைப்படி. 450 இருக்கைகள் கொண்ட விமானங்கள் தினம் ஒரு விமானம் என்ற அடிப்படையில் (மொத்தம் 7 விமானங்கள்) 22-4-1995 முதல் 28-4-1995 வரை சென்னையிலிருந்து புறப்படவுள்ளன.

நேரடி விமானத்திற்கிடையில் குறைந்தது ஒரு நாள் கால இடைவெளி இருக்குமாறு விமான பயணத் திட்டத்தை அமைக்க ஏற்பாடு செய்யக் கோரி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரகத்திற்கு தமிழக அரசு பாக்ஸ் செய்தி ஒன்றை 31-3-1995 அன்று அனுப்பியுள்ளது. இது தொடர்பாக மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் எந்த நிலைமையையும் சமாளிக்க வேண்டியும் ஹஜ் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படாது பார்த்துக் கொள்வதற்கும் வேண்டி கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்க, மாநில ஹஜ் குழுத் தலைவர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் தலைமையில் 30-3-1995 அன்று கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது:

(1) ஒரே நேரத்தில், ஏறக்குறைய 1,000 பயணிகள் தங்குவதற்கு ஏற்ப, ஏற்பாடுகள் மதராஸ் ஹஜ் சர்வீஸ் சொசைட்டி மற்றும் மலபார் முஸ்லீம் அசோசியேஷன் போன்ற நிறுவனங்களின் உதவியால், சென்னையிலுள்ள ஓட்டல் இம்பாலா காண்டினன்டல் மற்றும் மலபார் முஸ்லீம் அசோசியேஷன் ஹாஸ்டலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவசரத் தேவைக்கென விமானப் பயணிகள் தங்க, தனியார் தங்குமிடங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(2) பயண ஆவணங்களை புனிதப் பயணிகள் பயணம் புறப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு குழுவிலுள்ள ஒரு நபர் மட்டும் அலுவலகத்திற்கு வந்து அக்குழுவிலுள்ள

அனைவரின் பயண ஆவணங்களையும் பெற்றுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(3) பயணிகள் பயண உடைமைகளை பரிசோதிப்பதற்காக, ஏர் இந்தியா நிறுவனம், சிறப்பு கவுண்டர்கள், சென்னையில் உள்ள ஓட்டல் இம்பாலா கான்டினன்டலில் அமைக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்ட உடைமைகள் பயணிகளிடமிருந்து பெற்று போர்டிங் பாஸ் பயணிகளுக்கு விமானம் புறப்படுவதற்கு ஒருநாள் முன்னரே வழங்கப்படும். இதனால் விமான நிலையத்தில் ஏற்படும் நெரிசலை தவிர்க்க முடியும்.

(4) பயணிகளுக்கு ஒவ்வொரு நேர்விலும் தக்க உதவி செய்ய ஹஜ் குழு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களின் தொண்டர்கள் போதுமான அளவில் நியமிக்கப்பட்டுள்ளனர்;

(5) மாநில ஹஜ் குழு புனித பயணிகளைத் தங்குமிடங்களிலிருந்து, விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்ல இலவச பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளை ஏற்பாடு செய்யும்;

(6) ஷாமியானா, மைக், குடிநீர், கழிவறை, குளியலறை போன்ற வசதிகள், இந்திய பன்னாட்டு விமான நிலைய அதிகாரிகளாலும், ஹஜ் குழுவாலும் விமான நிலையத்திற்கு உள்ளும், புறமும் ஏற்பாடு செய்யப்படும்;

(7) பயணிகள் தங்குமிடங்களிலும், விமான நிலையத்திலும் போதிய காவலர் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படும். பயண நாளன்று வாகனங்கள் ஒழுங்கு படுத்துதலுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாநில ஹஜ் குழுவின் உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி நடவடிக்கைகளால், புனித பயணிகளின் நலம் பாதுகாக்கப்படும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஹஜ் குழு ஒரு நாள் கால இடைவெளியாவது ஹஜ் விமானப் பயணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்ட பிறகும், இடைவெளி இல்லாமல் ஏப்ரல் 22 ஆம் தேதி முதல் ஏப்ரல் 28 ஆம் தேதி வரை ஹஜ் விமானங்கள் சென்னையிலிருந்து புறப்பட மத்திய அரசு ஏற்பாடு செய்து இருப்பதை ஏற்றுக் கொள்ள மறுத்து, முன்னதாகக் கேட்டுக்கொண்டபடி தமிழக ஹாஜிகளின் விருப்பத்தை, அதாவது இடைவெளியோடு விமானப் பயணம் செய்ய ஏற்பாடு செய்யுமாறு தொலைபேசி மூலமாகவோ, பேக்ஸ் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மத்திய அரசை மீண்டும் மாநில அரசு வலியுறுத்துமா என்றும், அதேபோல டில்லி, பம்பாய் போன்ற விமானத் தளங்களிலிருந்து இந்த மாதம் 7 ஆம் தேதி முதலே இடைவெளியோடு ஹஜ் விமானப் பயணம் செல்ல பம்பாய் ஹஜ் குழு ஏற்பாடு செய்து

இருக்கும்போது, சென்னைக்கு மாத்திரம் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடந்துகொண்டதுடன், விமானப் பயணங்களை ஏற்பாடு செய்யும் அதிகாரிகள் தமிழக ஹஜ் பயணிகளின் கோரிக்கைகளை முற்றிலும் நிராகரித்து, தங்கள் மனம் போன போக்கில் பயண ஏற்பாடுகளைச் செய்து இருப்பதைப் பற்றி கண்டனம் தெரிவித்து, அடுத்த ஆண்டிலும் இத்தகைய ஒரு நெருக்கடி நேராமல் இருக்கின்ற வகையில் தக்க வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்றும், மேலும் மத்திய ஹஜ் குழுவையே எதிர் பார்க்காமல் தமிழ்நாடு ஹஜ் குழுவே நேரடியாக ஹஜ் விமானப் பயணம் ஏற்பாடு செய்ய ஆவன செய்வார்களா என்றும் மேலும் இந்த ஹாஜிகள் ஹஜ் பயணம் செய்யும்போது டிக்கெட்டுக்காக பணம் கொடுக்கிறார்கள்; அதை மாநில ஹஜ் குழுவே தன்னுடைய பெயரிலே வங்கியிலே போட்டு, அதற்குண்டான ஏற்பாடு செய்வதற்கு தமிழக அரசினுடைய ஹஜ் குழு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய ஹஜ் கமிட்டி எப்போதுமே அது மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து தமிழகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் இன்னல்களைத் தந்துக் கொண்டிருந்தது. அதைப் போல இந்த ஆண்டும் அவர்கள் இன்னலை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் நமது அன்னை மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு எந்த சோதனையிலுமே வென்று காட்டுகின்ற ஒரு மாபெரும் தலைமையைப் பெற்றிருக்கின்ற இந்த அரசு இந்த புனித ஹாஜிக்ளை புனித பயணத்திற்கு அனுப்புகிற வகையிலே வெற்றிகரமாக நடத்துதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது. ஃபேக்ஸ் மூலம் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டபோது விமான பயண தேதியை மாற்ற இயலாது என்றும், மத்திய ஹஜ் குழு மற்றும் ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. அதற்கு அவர்கள் சொல்கிற காரணம் சவுதி அரேபியா அரசு விமான தேதிகளை ஏற்கனவே நிர்ணயித்துவிட்டதால் தேதியை மாற்றித் தர இயலாது என்று சொல்கிறார்கள். அதைப் போல மற்ற மாநிலங்களுக்கும் இதுபோல ஒரு நாள் இடைவெளி விடுகிற வகையிலே மத்திய ஹஜ் கமிட்டி செயல்பட்டிருக்கிறது. மத்திய ஹஜ் கமிட்டிக்கு மாநில ஹஜ் கமிட்டியினுடைய சார்பில் நாங்கள் தெரிவித்து இருக்கிறோம். எதிர்காலத்தில் இதுபோன்ற இடர்பாடுகள் ஏற்படாதவண்ணம் இந்த அரசு கவனத்துடன் செயல்படும். அதைப்போல அந்த பயணிகளின் பணங்களைப் பொறுத்த அளவில் இந்த மாநில ஹஜ் கமிட்டியும் மாநில அரசும் அத்தகைய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று நாங்கள்

கேட்டோம். பலமுறை மத்திய ஹஜ் குழுவை வற்புறுத்தியும் இதுவரை அவர்கள் அனுமதி தர மறுத்து வருகிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா:. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக சகோதரத்துவத்திற்கும் ஒருமைப்பாட்டு உணர்வுக்கும் எடுத்துக்காட்டாக, உலகத்தின் பல்வேறு கோணங்களில் இருந்து ஹஜ் யாத்திரைக்காக கூடுகிற சவுதி அரோபியா நாட்டின் சார்பில், துபாயில் உள்ள சவுதி அரேபியா அரசின் கலாச்சார சமய தகவல் மையத்தின் தலைமைப் போதகர் எஸ். முகமது மொகைதீன் மதனி அவர்கள் அனைத்து நிலைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கவேண்டும் என்று இஸ்லாம் மார்க்கம் கூறியிருப்பதைப் போல சிறந்த பெண்மணியாக இருந்து இவ்வளவு சிறப்பாக ஆட்சிச் செலுத்தி வருகின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டி தித்திக்கும் திருமறையான திருக்குரானின் ஆங்கில மொழிப் பெயர்ப்பை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வழங்கியுள்ளார்கள்; சவுதி அரேபிய நாட்டின் சார்பாக வழங்கியுள்ளார்கள். உலக முஸ்லீம் பெருமக்கள் கூடுகின்ற புண்ணிய பூமியான சவுதி அரேபியா . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்கச் சொன்னேன். பல தடவை உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். அப்படியும் இன்னும் உங்களுக்கு பயிற்சி வரவில்லை என்றால் என்ன செய்வது ?

திருமதி கே. மரியம் உல் ஆசியா: அம்மாவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததைச் சொல்கிறேன். உலக முஸ்லீம் பெருமக்கள் கூடுகின்ற புண்ணிய பூமியான சவுதி அரேபிய அரசாங்கம் பாராட்டுகிறது என்றால் உலக இஸ்லாமிய சமுதாயம் பாராட்டுகிறது என்று பொருள். அதுமட்டுமல்ல, மேற்காசிய நாடுகளின் புகழ் பெற்ற 'கல்ஃப் நியூஸ்' போன்ற பத்திரிகைகள் எல்லாம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்ளைப் பாராட்டி எழுதுகின்றன. அப்படிப்பட்ட உலகப் புகழ் பெற்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஹஜ் பயணிகளின் நலத்தைக் கருத்தில் கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்காக இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நாளைக்கு ஹஜ் விமானத்தில் 450 ஹாஜிகள் வீதம் பயணமாவதாக விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஹாஜியை வழியனுப்ப 5 உறவினர்களாவது சென்னைக்கு வருகிறார்கள் என கணக்கிடப்படுகிறது. அப்படியானால் 2,500 பயணிகளும் அவர்கள் உறவினர்களுமாக ஒவ்வொரு நாளும் சென்னை வந்து இருந்து காரியம்

ஆற்ற வேண்டியிருக்கிறது. மேலும் ஹாஜிகள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இம்பாலா ஓட்டலில் சுமார் 200 பேர்கள் தான் தங்கமுடியும். மலபார் முஸ்லீம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி வேறு ஏதாவது விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். இப்போது கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: கேள்வியாகக் கேட்கிறேன். எனவே இந்த பயணிகள் தங்குவதற்கு இன்னும் கூடுதலாக விடுதி வசதிகள் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா? இதற்காக மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித பயணத்தை மேற்கொள்கிற அந்த புனித பயணிகள் அவர்களுடைய உறவினர்களை அதிகமாக அழைத்துவர வேண்டாம் என்றும், இந்த ஆண்டு நாள் ஒன்றுக்கு 450 பேர்கள் பயணம் செய்கின்ற காரணத்தால் ஒரு நாளைக்கு ஆயிரம் பேர்கள் தங்குவதற்கு மாநில ஹஜ் கமிட்டி வசதி ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் அதிகமான சுற்றத்தாரை அழைத்து வரவேண்டாம் என அவர்களுக்கு அன்பு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. அதைப் போல 4 தனியார் இடங்கள், சித்திக் சராய், இம்ப்பாலா, சென்னை ஹஜ் சொசைட்டி, மலபார் முஸ்லீம் அசோசியேஷன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் இளைஞர் விடுதி ஆகியவை மாற்று ஏற்பாடாக தயார் நிலையிலே மாநில ஹஜ் கமிட்டி வைத்திருக்கிறது.

எனவே, ஹஜ் யாத்திரை செய்கிற பயணிகளுக்கு எந்தவிதமான இடர்பாடும் ஏற்படாதவண்ணம் ஹஜ் கமிட்டி நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப்போல, விமான நிலையத்திலும், விமான நிலையத்தினுடைய வெளிப்புறங்களிலும், உள்புறங்களிலும் ஷாமியானா அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.